## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## M.C.O.P.No.67/2019

Deposition of PW.2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 21.04.2023. **Evidence Recorded Time: 03.41 P.M. to 03.55 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மருத்துவர் எஸ்.அருண், எலும்பு முறிவு பிரிவு** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை**:-

நான் இதில் மனுதாரர் தரப்பு சாட்சி.2 ஆவேன். எனது சத்திய பிரமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

ம.சா.ஆ.12– – ஊனச் சான்று – சான்றிட்ட நகல்

எனவே எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

மோட்டார் வாகன இழப்பீடு சம்மந்தமாக உடல் ஊன சான்று வழங்க சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஒவ்வொரு மாவடத்திலும் மருத்துவ குழு அமைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மருத்துவ குழுவில் உள்ள உறுப்பினர்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அந்த மருத்துவ குழுவில் உள்ள மருத்துவர்கள் நீதிமன்றத்தில் இருந்து அனுப்பபட்ட மனுதாரரை பரிசோதனை செய்த பின்னர் ஒரு மனதாக முடிவு எடுத்து அனைவரும் கையொப்பம் இட்டு ஒரு ஊனச் சான்றினை நீதிமன்றத்திற்கு நேரடியாக அனுப்பிவைப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த குழுவில் உள்ள மருத்துவர்களில் தனிப்பட்ட மருத்துவர் அவருடைய தனிப்பட்ட கருத்துடன் ஊனச்சான்றினை நீதிமன்றத்திற்கு அனுப்பப்படக்கூடாது என்றால் அதுபற்றி தெரியாது. அவ்வாறு தனிப்பட்ட முறையில் ஊனச் சான்று அனுப்பினால் அது சென்னை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு புறம்பானது என்றால் அதுபற்றி தெரியாது. மருத்துவ போர்டில் இருந்து எந்த படிவத்தில் ஊனச்சான்று வழங்கப்படவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழிகாட்டுதல் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. நான் வழங்கியுள்ள ஊனச்சான்று அவ்வாறு இல்லை என்றாலும் அது வேலையாட்களின் இழப்பீட்டு சட்டத்தின் அடிப்படையிலும்

கணக்கிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலில் குறிப்பிடப்பட்டுள்ளது போல guidlines at Annexer – II of Notification, dated 04.01.2018 to superced guidelines issued in notification 01.06.2001 and 18.02.2002 என்ற guidelines அடிப்படையில் ஊனச்சான்றிதழை கணக்கிடவில்லை என்றால் சரிதான். வழக்கமாக நாங்கள் நோயாளிக்கு வழங்குவதை கொடுத்துள்ளேன். நான் வழங்கியுள்ள ஊனச்சான்று பக்கம் 2ல் 2018–ல் superced guidelines issued in notification 01.06.2001 தேதியிட்ட Ministery of Social Justice and Empowerment படி ஊனச்சான்று ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றாலும் நிராகரிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வழங்கியுள்ள ஊனச்சான்று பக்கம் 2ல் Parcial loss of memory of past events என்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மனுதாரர் 07.12.2022–ம் தேதியில் மனுதாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று தெளிவாக கூறியுள்ளார் என்பதால் Parcial loss of memory of past events என்ற நான் வழங்கியுள்ள சான்று பொய் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு ஊனச்சான்று வழங்கும் போது அவரை பார்க்கவில்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில்தான் ஊனச் சான்று வழங்கினேன் என்றாலும் சரியல்ல. மனுதாரருக்கு நான் சிகிச்சை அளித்தேன் என்றாலும் நான்தான் டிஸ்சார்ஜ் சம்மரியும் நான்தான் வழங்கினேன் என்றாலும் சரிதான். மனுதாரருக்கு உதவி செய்யும் நோக்கத்தில் ஊனச்சான்று வழங்கமுடியாது என்று தெரிந்தும் தவறான ஊனச்சான்று வழங்கியுள்ளேன் என்றாலும், ஊனச்சான்று நிராகரிக்கப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. மனுதாரரை நான் எப்போது பார்த்தேன் என்றால் 01.03.2023 அன்று பார்த்தேன். மருத்துவ குழுவில் நான் உறுப்பினராக இருக்கிறேனா என்றால் இல்லை. டிஸ்சார்ஜ் சம்மரியில் மனுதாரர் குணமமைந்ததாக தான் கூறியுள்ளேன் என்றால் மனுதாரர் உடல் நிலையில் முன்னேற்றம் இருந்ததால் டிஸ்சார்ஜ் செய்தேன். அதன் பிறகு மனுதாரர் பரிசோதனைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. 28 சதவீதம் ஊனம் என்பது அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.